ஜனநாயக சர்வாதிகாரி நரேந்திர மோடியின் ஆட்சி ஆட்டங்காணத் தொடங்கிவிட்டது!

கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் அவர்களின் இடைவிடாத போராட்டத்தினால் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானைப் பதவியை விட்டு இறங்கச் செய்தனர். மோடியும் அமித்ஷாவும் அது முதல் பெருத்த அதிர்ச்சிக்கு ஆளாகி இருக்கின்றனர். கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை இனி, சிஜேபி என்றே சுருக்கமாக இக்கட்டுரையில் குறிப்பிட்டு இருக்கின்றோம். இக்கட்சியின் 'ரிஷிமூலம்' என்பது மக்களிடமிருந்து தான் என்பதை மோடியும் அமித்ஷாவும் ஏற்கவில்லை, இதில் என்ன வேடிக்கை என்றால் சி.ஜே.பி.யைப் பற்றி 'அவர்கள்' இதுவரை எதுவும் நேரடியாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

சிஜேபியின் போராட்டங்கள் ஏன் நடந்தன? ஏன் தொடருகின்றன? அவை மோடி அரசின் தன்னிச்சையான சர்வாதிகார போக்கினால்தான் நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. ஊழலே இல்லாது மாதிரியான ஒரு தோற்றத்தை வழங்கி வரும் மோடி அரசு அதன் நடவடிக்கைகளை ஆய்வுச் செய்தால் ஊழலில் அது குளித்துக் கொண்டு இருக்கிறது. இது மட்டுமல்ல. ஜனநாயகத்தின் பெயரால் நீதிமன்றங்களை மோடி அரசு ஆட்டிப் படைக்கிறது. வருமான வரித்துறை கைகாட்டிய திசையில் பயணம் செய்கிறது. தேர்தல் ஆணையத்தைக் கையகப்படுத்திவிட்டது. அமலாக்கத்துறை அடுத்து என்ன? - என்று அரசைக் கேட்டு நிற்கிறது. ஆளுநர்கள் 'நாங்கள் மாநிலங்களை என்னவெல்லாம் செய்ய வேண்டும்' என்று கேட்டு நிற்கிறார்கள். தேசிய புலனாய்வு முகாமை கண்ஜாடைக்காகக் காத்து நிற்கிறது. இன்னும் என்னவெல்லாம் சுயேச்சையான நிறுவனங்கள் இருக்கின்றனவோ அவையெல்லாம் மோடி அரசின் சுட்டு விரலுக்கு சேவகம் செய்ய அடிமை போல் இருக்கின்றன. இதைச் செய்வதற்கு முன் அவர்கள் செய்த பணி என்ன?

மோடியும் அமித்ஷாவும் அராஜகத்தால் 'மைனாரிட்டி' ஆட்சியை 'மெஜாரிட்டி' ஆட்சியாக ஆக்கிக் கொண்டார்கள். மோடி அதிகாரப்பீடத்தில் அமர்ந்ததற்கான வெள்ளிவிழாவைக் கொண்டாடிப் 'பேருரை' ஆற்றி இருக்கிறார். மோடி பிரதமராகி என்ன இவர் செயற்கரிய திட்டங்களை மக்கள் பலன் அடையும் விதத்தில் நிறைவேற்றிக் காட்டி இருக்கிறார் என்றால் ஒன்றும் இல்லை.

★ மணிப்பூர் பிரச்சினையின் கொந்தளிப்பு அடங்கவில்லை.

★ கொடுத்த வாக்குறுதிபடி ஜம்மு - காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படவில்லை.

★ புதிதாக லடாக் பகுதிக்கான கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன. அவர்களின் பிரச்சினைகள் என்ன என்று கேட்கவில்லை.

★ நாட்டில் பெரிய திட்டங்கள் எதுவும் இல்லை.

★ பணவீக்கம் கட்டுப்படுத்தப்படவில்லை.

★ சீனஉறுமல் முற்றிலும் நீங்கவில்லை.

★ பாகிஸ்தான் ஊடுருவல் அடங்கவில்லை.

★ நாட்டின் வறுமை முற்றிலும் ஒழிக்கப்படவில்லை.

★ ஒன்றிய அரசு - மாநில அரசுகளுக்கான உறவுகள் சுமூகமாய் இல்லை.

★ வேலையில்லா திட்டங்கள் போக்கப்படவில்லை.

★தினத்தந்தி நாளேடு 23.10.2026 அன்று 25 ஆண்டு பிரதமரின் அதிகாரத்தில் நிகழ்த்திய 25 முத்தான சாதனைகள் குறித்து தலையங்கம் எழுதியிருக்கிறது. அதனையும் ஆய்ந்து பாருங்கள், உண்மை நிலவரங்கள் தெரியும்.

இப்படி மோடி அரசின் சாதனைகள் இருந்து வருகின்றன. **ஆனால் மோடி - அமித்ஷா வகையறாக்களுக்கு கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும் இந்தியாவை ஆளவேண்டும். அகண்ட 'இந்து' இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஜனநாயகத்தை மோடி எவ்வளவு சிதைத்தாலும் சின்னாபின்னப்படுத்தினாலும் 'போராடும் சக்தி' என்பது மோடியைத் தேர்ந்தெடுத்த சக்தியைவிட மிக அதிகமானது - எண்ணிக்கையில் மிகப் பெரிது என்பதை மோடி மறந்து, 'ஜனநாயக சர்வாதிகாரத்தை' மேற் கொள்கிறார். இன்று நிலைமை என்ன?**

'கரப்பான் பூச்சி' ஜனதா கட்சிக்கு முன்னொட்டு எப்படி வந்தது என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ளலாம். 2026 மே 15 ஆம் தேதி அன்று வழக்கு தொடுக்க வரும் பொதுமக்களைக் கரப்பான் பூச்சிகளைப் போல் வழக்குரைஞர்களைக் கூழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். பல கீழமை நீதிமன்றங்களில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூரிய காந்த் கூறினார்.

இப்படி அவர் கூறியது இந்தியாவில் உள்ள வேலையில்லாத இளைஞர் களை இழிவுப் படுத்துவதாகும் என்று அமெரிக்காவில் அந்தச் சமயத்தில் இருந்த அபிஜித் தீப்கே இணைய தளத்தில் பதிவிட்டிருந்தார். அது முதல் 24 மணி நேரத்தில் 50,000 பேரும் ஐந்து நாள்களில் 10 இலட்சமாகவும் ஆதரவு அதிகரித்தது. இந்த ஆதரவையே உச்சநீதிமன்ற நீதிபதி கூறிய கரப்பான் பூச்சியை அடையாளமாக்கி கொண்டு ஜனதா கட்சியின் முன்னொட்டாக ஆக்கினர். இதுவே ஓர் அமைப்பாக உருவாகிவிட்டது. இந்த அமைப்பினர் போராட்டம் நடத்தி தர்மேந்திர பிரதானை அமைச்சர் பொறுப்பிலிருந்து நீக்கிய வெற்றியை சிஜேபி பெற்று விட்டது.

நாம் மேலே சொன்ன சிஜேபி போராட்டக்களத்தில் தோன்றி மோடியைக் கதிகலங்க வைத்து இருக்கிறது. அதிர்ச்சியும் அச்சமும் அவர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டு இருக்கிறது. இவர்களை எப்படி எதிர்கொள்வது என்று அவர்களை பெருங்குழப்பம் ஆட்கொண்டுவிட்டது. அந்த நேரத்தில் ஒரு குரல் ஒலித்தது. மேரி மில்பென் எனும் அமெரிக்கப் பாடகி சிஜேபிக்கும் அபிஜித் தீப்கேவுக்கும் அமெரிக்க நிதியுதவியாளர்கள் பணம் தருகிறார்கள். ஆகவே மோடி அரசை எதிர்த்துப் போராடுகிறார்கள் என்று கூறினார்.

க.திருநாவுக்கரசு
திராவிட இயக்க
ஆய்வாளர்



மோகன் பகாவத் அந்நிய சக்தி ஊடுவல் எனும் கருத்தில் சிஜேபியை விமர்சனம் செய்கிறார். இராஜ் நாத் சிங் ஆட்சி மாற்றம் என்ற கருத்தை முன் வைக்கிறார். இத் தருணத்தில் மோடி அவர் அதிகாரத்திற்கு வந்த 25 ஆம் ஆண்டைக் கொண்டாடுகிறார். அமெரிக்கப் பாடகி மேரி மில்பென் பா.ஜ.கவின் குரலில் பேசுவதாகத்தான் நாம் கருதுகின்றோம். அவர் என்ன சொல்கிறார்? அமெரிக்க நிதியாளர்கள் சிஜேபிக்கு உதவுகிறார்கள் என்கிறார்.

அமெரிக்க நிதியாளர்கள் சிஜேபிக்கு உதவி பா.ஜ.கவுக்கு எதிராகப் போராட செய்யும் வரை மோடி அரசின் உளவுத்துறை தகவல் எதையும் அரசுக்கு தெரிவிக்காதா? மௌனம் காக்குமா? அமெரிக்கப்பாடகி சொல்வது உண்மையானால் மோகன் பகாவத் சொல்வதும் சரியானதாகிவிடும். போராட்ட நிலைமைகளை எதிர்கொள்வதற்காக அமெரிக்க நிதியாளர்களைப் பாடகி மூலம் பா.ஜ.க.வினர் கற்பனையாகப் படைத்துக் கொள்கிறார்கள். அந்தக் கருத்தை வெளியிடச் செய்கிறார்கள்.

உண்மையில் நடப்பது என்ன? அதைப் பீப்பிள்ஸ் டெமாக்ரசி (அக்.18/2026) அம்பலப்படுத்தியிருக்கிறது. இதோ அந்தக் கூற்றைப் படித்துப் பாருங்கள்.

ஆர்.எஸ்.எஸ்.கீழ் இயங்கும் இரண்டு பெரிய அமைப்புகள் அமெரிக்காவின் இலாப நோக்கமற்ற அமைப்புகளுக்கான சட்டங்களைப் பயன்படுத்தி, இந்தியாவிற்குள் நிதிகளைக் கொண்டு வந்து இருக்கின்றன."

இது மெய்யா? அமெரிக்கப் பாடகி சொல்வது மெய்யா? அமெரிக்கப் பாடகி மேரி மில்பென்னின் குரல் எங்கிருந்து எழுப்பப்படுகிறது? - என்று நாம் கேட்க விரும்புகின்றோம்.

ஏன் - நாம் இப்படிச் சொல்கிறோம் என்றால் பத்திரிகையாளர் சுஹாசினி ஹைதர், ஜென்சி போராட்டக்காரர்கள் மீதான பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் அய்.நா. அவையிடமிருந்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்தியா சர்வதேச அளவில் இரட்டை நிலைபாடுகளை எதிர்கொள்கிறதா?" என்று கேட்டுள்ளனர். இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது அமெரிக்க நிதியாளர்கள் சிஜேபிக்கு உதவி செய்து இருந்தால் பா.ஜ.க.வுக்கு எதிரான விமர்சனங்களை சுஹாசினி ஹைதர் குறிப்பிட்டுள்ள அமைப்புகள் செய்திருக்க முடியாது. ஒரு வேளை நிதியாளர்கள் யார் என்றும் அவர்கள் வெளிப்படுத்தி இருக்கக் கூடும்.

ஜென்சி போராட்டக்காரர்கள் இந்தியாவில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியாக - சிஜேபியாக அறிமுகமாகி இருக்கிறார்கள். ஆனால் உண்மை நிலவரம் என்ன? ஆசியாவில் தொடங்கிய எழுச்சி அய்ரோப்பாவிற்கும் பரவி இருக்கிறது என்பதுதான் நமக்குக் கிடைக்கும் செய்திகளாக இருக்கின்றன. இந்தியாவில் தன் எழுச்சியான இளைஞர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவது ஏற்புடையதாகிவிடாது. இவர்கள் ஜூன் மாதத்தில் 23 நாள்கள் ஜந்தர் மந்தரில் தர்மேந்திர பிரதான் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று உண்ணா நோன்பில் தொடங்கி தொடர்ந்து போராடி வெற்றி பெற்றனர்.

தேர்தல் தலைமை ஆணையரை விலகக் கோரியும் எஸ்.ஜ.ஆரை ரத்து செய்யவும் சிஜேபி மற்றும் அமைப்புகள் டெல்லியில் அக்.10, 11,12 தேதிகளில் நிகழ்த்திய போராட்டம் டெல்லியை அதிரச் செய்தன. காவல் துறையினரும் துணை இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். 30 இடங்களில் சாலை தடுப்புகளால் அடைத்தனர். 4 கி.மீ. சுற்றளவு தூரத்திற்கு ஜந்தர் மந்தர் பகுதியில் இணைய சேவை முடக்கப்பட்டது. 57 மெட்ரோ ரெயில் நிலையங்கள் மூடப்பட்டன. 35 தடுப்பு மய்யங்களில் போராட்டக்காரர்கள் அடைத்து வைக்கப்பட்டனர். டெல்லி பெருநகர எல்லைகள் அனைத்தும் மூடப்பட்டன. போராட்டக்காரர்கள் மீதும் அவர்களுக்கு ஆதரவாகத் திரண்ட மக்கள் மீதும் துணை இராணுவம் தாக்குதலைத் தொடுத்தது.

பெருநகரங்களில் எல்லாம் இத்தகைய கிளர்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. இதைப் பற்றிதான் மோகன் பகாவத் விஜயதசமி விழாவில் பின்வருமாறு பேசியிருக்கிறார்.

ஆட்சி மாற்றத்துக்காக வங்காளதேசம், நேபாளம், பிரான்ஸ் மற்றும் அல்பேனியா போன்ற நாடுகளில் சமீபத்தில் ஏற்பட்ட அரசியல் கொள்ளளிப்புகளையும் ஆட்சி மாற்றங்களையும் நாம் பார்த்தோம். தங்களது சொந்த சுயநலன்களை அடைய நினைக்கும் சில சர்வதேச சக்திகள் ஒரு நாட்டின் அரசியல் சூழலை மாற்றுவதற்காக இந்த ஆட்சி மாற்ற, ஆயுதத்தை பயன்படுத்துகின்றன. ஆட்சியை மாற்றினால் எல்லாம் மாறிவிடும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் வரலாற்றில் அப்படி ஒரு போதும் நிஜமாக நடந்ததே இல்லை. ஆட்சி மாற்ற போராட்டக் காரர்களிடம் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

தினந்தந்தி (21.10.2026)

இந்தப் பேச்சுக்குத் தந்தி நாளேடு போராட்டக்காரர்களிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என தலைப்பிட்டு இருக்கிறது. பா.ஜ.க. அரசுக்கு எதிராக மக்கள், இளைஞர்கள், மாணவர்கள் திரண்டு ஆட்சி மாற்றம் தேவை எனவும் தேர்தல் ஆணையரை விலக்குங்கள் என்றும் முழக்கங்கள் நாடு தழுவி ஒலிக்கத் தொடங்கிவிட்டது. அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆகவேதான் மோகன் பகாவத், ராஜ்நாத் சிங் போன்றவர்கள் புலம்பத் தொடங்கிவிட்டார்கள். அமைதியாக இருந்து வந்த மோடி இப்போது பிரிவினைவாத சக்திகள் நாட்டில் உள்ளதாகச் சொல்கிறார். அமித்ஷா அதை வேறு விதமாகக் கூறி ஓலமிடுகிறார். இவர்கள் உள்நாட்டுப் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாமல் பலவிதமான பொய்யான தகவல்களைக் கூறித் திசை திருப்பிக் கொண்டு இருக்கிறார்கள். ஆக, இவர்கள் எவ்வளவு தான் கர்ஜித்தாலும் காரணகாரியங்களை எடுத்து விளக்கினாலும் ஜெர்மானிய கவிஞர் கதே,

கருத்து ஒன்று காலத்தால் கனிந்து
கனத்து வந்துவிட்டால் அதைவிட வலியது வேறு ஏது?"

என்று சொன்னதுபோல இவர்கள் ஆட்சிக்கு முடிவு ஒன்று 'கனிந்து கனத்துவிட்டதால்' தான் சிஜேபியின் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

அதனால்தான் அபிஜித் தீப்கே, சௌரவ் தாஸ், அசுதோஷ் ரங்கா போன்றவர்களோடு மாணவர் அமைப்பின் தலைவியான நேகா போராவும் இணைந்து ஞானேஷ் குமாரைப் பதவியிலிருந்து அகற்றவும் இன்னொரு வகையில் ஆட்சி மாற்றத்திற்கான தொடக்கப் போராட்டத்தையும் நிகழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள்.

அரசியல் போராளி யோகேந்திர யாதவ், பராகல பிரபாகர், நடிகர் பிரகாஷ் ராஜ், சாந்தி பூஷண் போன்றவர்களும் மற்றும் ஒதுங்கியிருந்த தனிப்பட்ட சிந்தனையாளர்கள் எல்லாம் சிஜேபிக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆதரவு மேலும் கூட வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கின்றன. இது மட்டுமல்லாமல் இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் காங்கிரஸ் கட்சியைக் காட்டிலும் மிக மிக அதிகமான வரவேற்புகள் சிஜேபிக்கு இருந்து வருகின்றது. அதாவது சிஜேபி முதல் இடத்தில் இருந்து வருகிறது எனும் செய்திகள் வெளியாகிக் கொண்டு இருக்கின்றன.

ஒன்றிய அரசு தனது அதிகாரத்தைக் கொண்டு போலீசை ஏவி அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டாலும் நீதித்துறையினர் கட்டுப்பாடுகளை விதித்தாலும் ஜனநாயக எழுச்சி சிஜேபியின் மூலம் கட்டறுத்து மோடிக்கும் அமித்ஷாவுக்கும் அறைகூவலை விடுக்கத் தொடங்கிவிட்டது. அபிஜித் தீப்கே அவரைச் சார்ந்த சிஜேபியின் தலைவர்கள் கைது செய்யப்பட்ட போது நமது கழகத் தலைவர், அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு அறிக்கையை வெளியிட்டார். நமது தலைவர் அவர்களின் எழுச்சியின் அடிப்படை 'மக்கள் சக்தியே' என்பதை உணர்ந்து வெளிப்படுத்தி இருக்கிறார்.

அபிஜித் தீப்கே சிஜேபியின் தலைவர். இந்த இளைஞரின் பெயரைச் செய்திகளில் பார்த்தவுடன் நாம் (கட்டுரையாளர்) 30.01.2024 தேதியிட்ட முரசொலியில், 'அயோத்தி பாலராமர் பேசினால் என்ன பேசுவார்?' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தோம். அதில் இப்படிக் குறிப்பிட்டு இருந்தோம்.

பிரதமர் மோடி ஜனவரி 22 ஆம் தேதி நண்பகல் 12.29:08 - 12.30:32 ஆகிய இடைப்பட்ட இந்த நேரத்தில் - அபிஜித் முகூர்த்தத்தில் கறாரான நேரத்தில் தான் பிராண பிரதிஷ்டை சடங்கைச் செய்தார். 84 விநாடிகளுக்குள் இந்தச் சடங்கு நடத்தப்பட்டு விட்டதாம். என்னை பாலராமாக்கினார்கள். உயிரூட்டினார்கள். ஹெலிகாப்டரிலிருந்து கோவிலின் மீது மலராகப் பொழிந்தார்கள்"

நாம் மேலே 'அபிஜித் முகூர்த்தம்' என்று குறிப்பிட்டு இருக்கின்றோம் அல்லவா? அதிலுள்ள 'அபிஜித்' என்கிற சொல்லே 'அபிஜித் தீப்கே' எனும் பெயரில் இடம் பெற்று இருக்கிறது. அபிஜித் முகூர்த்தத்தில் ஏன் பாலராமரை பிரதிஷ்டை பிரதமர் செய்தார் என்றால் அது மிகச் சிறப்புக்குரிய நேரம். தினந்தோறும் 45 முதல் 48 நிமிடங்கள் வரை நிகழும் முகூர்த்தம் ஆகும். அதில் 84 விநாடிகளைத் தேர்ந்தெடுத்து பாலராமரை பிரதிஷ்டை செய்தார்கள். இதனை வேதசோதிடம் என்கிறார்கள். அதன்படி பிரதமர் பாலராமரை பிரதிஷ்டை செய்தார். இந்த அபிஜித் முகூர்த்தம் ஒரு மனிதனாகவே இயற்கையாக பிரதமர் மோடிக்கு எதிராக இன்று முளைத்து அவரை வீழ்த்த முன் வந்து இருக்கிறது.

அபிஜித் என்றால் 'வீழ்த்த முடியாதவன்' 'வெற்றியை நிலைநாட்டுபவன்' என்று பொருள் சொல்லப்பட்டு இருக்கிறது.

தீப்கேவுக்கு இந்தச் சொல்தான் அவர் பெயரின் முதல் மொழியாக அமைந்து இருக்கிறது. மோடி அரசை எதிர்த்து போராடும் சிஜேபியின் தலைவராக அபிஜித் தீப்கே எனும் இளைஞர் செயலாற்றுகிறார். இவர் இந்த பெயருக்கு ஏற்றாற்போல தர்மேந்திர பிரதானைப் போராட்டத்தின் மூலம் அவர் தலைமையில் போராடியவர்கள் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். இப்போது இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரைப் பதவியிலிருந்து அகற்றப் போராடுகிறார்கள். அது ஆட்சி மாற்றத்திற்கான நடவடிக்கையாகவும் அமைந்து இருக்கிறது.

பிரதமர் மோடி அதிகார சுவை கண்டு 10+15 (?) =25 ஆண்டுகளை நோக்கி விரைந்து கொண்டு இருக்கிறார். கொண்டாடி மகிழுகிறார். அதனை உரையாற்றிக் களித்துக் கொண்டு இருக்கிறார். ஆனால் சிம்மாசனத்து பொம்மைகள் அவரைப் பார்த்து நகைக்கத் தொடங்கி விட்டன. அபிஜித் தீப்கே என்று அவை உரத்த குரல் எழுப்புகின்றன. நரேந்திர மோடியின் ஆட்சியின் சிம்மாசனம் ஆட்டங்காணத் தொடங்கி விட்டது. இனி இதனைத் தடுக்க முடியாது. ●



மும்பை தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் 25.10.2026 அன்று தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அன்பழகன் பொற்கோ, மாறன் ஆரியசங்காரன், ம.நீதிதுரை, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில்

மும்பை தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பங்கேற்பு!

மும்பை,அக்.28- மும்பை திமுக ஆலோசனைக் கூட்டம் 25.10.2026 ஞாயிறு மாலை 6மணிக்கு தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் மும்பை திமுக பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அன்பழகன் பொற்கோ,மாறன் ஆரியசங்காரன், ம.நீதிதுரை, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. 01.04.2025 ல் இருந்து 30.09.2026 வரையிலான வரவு/செலவு கணக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

வருகிற நவம்பர் மாதம் நடைபெற உள்ள திமுக இளைஞரணி செயலாளர் , தமிழக எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாவது பற்றியும் பேசி முடிவு எடுக்கப் பட்டது.

கழக பணிமனைகள் இரண்டையும் கழக சட்ட திட்டத்தின்படி பொதுச்செயலாளர் பெயரில் பதிவு செய்ய வேண்டும் என்று ஒரு மனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. தொடர்ந்து கழகப்பணிகள் சிறப்புடன் செயல்பட தாராவி பகுதிக்கு இரா.இரவிராஜினி 90அடி சாலை, பகுதிக்கு தே. ஸ்டீபன்,பாந்திரா பகுதிக்கு எம்.இராசேந்திரன் ஆகியோரை கிளைக்கழக செயலாளர்களாக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

கழக பணிமனை மேல்தளத்தில் முந்தைய நிர்வாகத்தினரால் ஒப்பந்தம் பெயரில் அமர்த்தப்பட்டவர் ஒப்பந்தகாலம் முடிவடைந்தும் இடத்தை காலி பண்ணித்தரவில்லை அது சம்மந்தமாக நாம் எடுத்துள்ள முன்னெடுப்புகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அன்பழகன் பொற்கோ, மாறன் ஆரியசங்காரன், ம.நீதிதுரை கிளைக் கழக செயலாளர்கள் வக்கோலாசேலம் மா.சீனிவாசன், ஓர்லிஇரா.காந்தி, கொலாபாதிவான் மைதின், ஜவேரிபஜார்வே.இரவிச்சந்திரன், சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் தாராவி செயலாளர் என்.வி.சண்முகராசன் கழக பணிமனை காப்பாளர் க.ராசன் மூத்த உறுப்பினர் அன்பில் ரஞ்சன், கோ.கருணாநிதி, பரமசிவம், ஆகியோர் கலந்து கொண்டார்கள்.